## பொள்ளாச்சி நகராட்சி
## 25.08.2021 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில்
## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்
## தீர்மான எண். 2995 முதல் 3000 முடிய

2995) நகராட்சிக்கு சொந்தமான நாச்சிமுத்து பிரசவ விடுதி வளாகத்தில் இரண்டு சக்கர வாகன நிறுத்தம் அமைத்து பொது நல நடவடிக்கை மேற்கொள்ள பொறியியல் பிரிவில் இருந்து 10.09.2012ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி நகர் மன்ற தீர்மான எண்.583 நாள்:28.09.2012ல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகர் மன்ற தீர்மானம் எண்.773 நாள்:23.11.2012ல் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ:8/- ஆக கட்டணமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இக்குத்தகை உரிமம் திருமதி.சுகுணா என்பவருக்கு கீழ்கண்ட காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை காலம் | | ஆண்டு குத்தகை தொகை ரூ |
|---|---|---|---|
| | முதல் | முடிய | |
| 1 | 01.02.2019 | 31.01.2020 | 20,82,000 |
| 2 | 01.02.2020 | 31.01.2021 | 21,86,100 |
| 3 | 01.02.2021 | 31.01.2022 | 22,95,405 |

கொரோனா நோய் தொற்று காரணமாக வாகனங்கள் இயக்கப்படாமல் இருந்த காரணத்தால் இழப்பு ஏற்பட்டள்ளதாகவும் அதற்கான குத்தகை தொகையினை தள்ளுபடி செய்து வழங்கக்கோரி சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு wp எண்.12557/2021ல் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்ற உத்திரவு நாள் 11.06.2021ல் மனுதாரர் 16.06.2021க்குள் நிலுவை குத்தகை தொகை செலுத்திடவும் தவறும் பட்சம் பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவித்து வழக்கானது தள்ளுபடி செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து 16.06.2021 முதல் துறை மூலம் வசூல்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது துறை மூலம் கீழ்க்கண்டவாறு இறுதியாக வரப்பட்ட வசூல் விபரம்.

| நாள் | வரப்பட்ட வாகனத்தின் எண்ணிக்கை விபரம் | கட்டணம் ரூ | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 09.08.2021 | 531 | 8 | 4248 |
| 10.08.2021 | 559 | 8 | 4472 |
| 11.08.2021 | 581 | 8 | 4648 |
| 12.08.2021 | 550 | 8 | 4400 |

மேற்கண்ட தொகையில் அதிகமாக உள்ளது 4648 ஆகும் இதன்படி 4648x365 வீதம் ஆண்டுக்கு ரூ.16,96,520/- வரவு ஆகும்.

| | |
|---|---|
| | இதில் தினமும் காலை 6AM முதல் மாலை 6PM வரை ஒரு வருவாய் உதவி ஆய்வாளர், ஒரு தூய்மை பணியாளரும் இரவு 6 மணி முதல் முற்பகல் 6 மணிவரை ஒரு வருவாய் உதவி ஆய்வாளர், ஒரு தூய்மை பணியாளரும் நாள் ஒன்றுக்கு இரண்டு வருவாய் உதவி ஆய்வாளர்கள், இரண்டு தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். |

| வ.எண் | பணியாளர்களின் விபரம் | | மாத ஊதியம் | மொத்த செலவினத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ |
|---|---|---|---|---|
| 1) | வருவாய் உதவியாளர்கள் ஊதியம் துள்ளியமாக | 2 | 30,000x2 | 60,000 |
| 2) | தூய்மை பணியாளர்கள் | 2 | 20,000x2 | 40,000 |
| | | | மொத்தம் | 1,00,000 |

ஆண்டுக்கு 12,00,000 ஊதியம் செலவாகும். மொத்த வருவாய் 16,96,250-ல் செலவு 12,00,000 போக மீதம் ரூ.4,96,250 நகராட்சிக்கு வருவாய் ஆகும்.

இந்நிலையில் சுமார் 4 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இறுதியாக கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர்/முகவரி | ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|
| 1) | திரு.M. பார்த்திபன்,<br>74. ராஜ ராஜேஸ்வரி நகர்,<br>T. கோட்டாம்பட்டி,<br>பொள்ளாச்சி. | ரூ.19,10,000/- |
| 2) | திரு.P.அருண் கார்த்திக்,<br>74/1. பாலாஜி நகர்,<br>கோட்டாம்பட்டி,<br>பொள்ளாச்சி. | ரூ.18,80,000/- |
| 3) | திரு.முத்துச்சாமி,<br>S/O.மயில்சாமி,<br>51, அம்பேத்கர் வீதி,<br>வடுகபாளையம். | ரூ.17,10,001/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M.பார்த்திபன் என்பவர் சமர்ப்பித்துள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 5032/2020/அ6

| | |
|---|---|
| 2996) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான காந்தி வாரச்சந்தையில் விழும் கால்நடைகளின் சாணம், ஆடு அறுக்கும் இடங்களில் விழும் கழிவுகள், தேங்காய் மட்டை, இளநீர் மட்டை, தென்னங்கீற்று, பனை ஓலை, வைக்கோல், கிழங்கு கொடி, கரும்பு சோகை ஆகியவைகளை எடுத்துக்கொள்ளும் உரிமத்திற்காக ஏலம்/ஒப்பந்ப்புள்ளிகள் சுமார் 10 |

முறை கோரியும் எடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக ஏலம் போகாமல் இருந்துள்ளதால் அக்கழிவுகள் அனைத்தும் உயிர் வாயு உற்பத்தி மற்றும் மண்புழு உரம் தயார் செய்வதற்கும் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தொடர்ந்து மாட்டுச்சந்தை இயங்காத காரணத்தினாலும் பலமுறை ஏலம் கோரியும் எவரும் முன்வரவில்லை 13.08.2021 அன்று கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர்/முகவரி | ஆண்டு குத்தகை தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1) | திரு.S.சுந்தர வடிவேல்,<br>S/o.சேது ராமலிங்கம்,<br>1.VKV.லேஅவுட்,<br>CTC ரோடு,<br>பொள்ளாச்சி. | ரூ.25,250/- |
| 2) | திரு.P.ஜாகீர் உசேன்,<br>S/o. உமர்,<br>10/1. லிஸ்கையன் வீதி,<br>பொள்ளாச்சி. | ரூ.10,004/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.சுந்தர வடிவேல் என்பவர் ஆண்டுக்கு ரூ.25,250/-க்கு கொடுத்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 5035/2020/அ6

**2997)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் முதல்தள கடை எண்.14 சுமார் 8 ஆண்டுகளாக காலியாக உள்ளது. மேற்படி கடையினை சுமார் 30 முறைக்கு மேல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

தற்சமயம் மாதவாடகை தொகை ரூ.1850/- திருமதி.R.சாந்தாமணி கதவு எண் 3, A.V.S. காம்பிளக்ஸ், ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி என்பவர் 13.08.2021ல் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார் சுமார் 30 முறைக்கு மேல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும், எவரும் முன்வராததால் எதிர்வரும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு ரூ.1850/-க்கான திருமதி.R.சாந்தாமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 1131/2020/அ6

**2998)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான மரப்பேட்டை கடை எண்.2, 01.07.2021 முதல் காலியாக உள்ளது. மேற்படி கடைக்கு மாதவாடகை ரூ.4,255/- ஆகும்.

தற்சமயம் 3 முறை ஏலம் கோரியதில் இறுதியாக திரு. ரவிசங்கர் என்பவர் ரூ.9667/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். இதனை எதிர்த்து திரு.செந்தில்நாதன், கதவு

எண் 16 ஸ்ரீ சக்தி விநாயகர் நகர் லே அவுட், குளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி என்பவர் மறு ஒப்பந்தப்புள்ளி கோர 25% challenge தொகை செலுத்தியதால் அதன்படி 13.08.2021 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.செந்தில்நாதன் என்பவர் ரூ.15,110/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். பழைய வாடகை தொகை ரூ.4255/-ஐ விட கூடுதலாக உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,100/- திரு.செந்தில்நாதன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1131/2020/அ6

**2999)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான பெருமாள் செட்டி வீதி கடை எண்.14 01.04.2021 காலியாக உள்ளது. மேற்படி கடைக்கான பழைய வாடகை ரூ.5610/- ஆகும். மேற்படி கடையினை சுமார் 3 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. 13.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | மாத வாடகை |
|---|---|---|
| 1) | திரு.கௌதம்,<br>s/o.கனகராஜ்,<br>34 D கோவில்பாளையம்,<br>கோவை. | ரூ.7000/- |
| 2) | திரு.மா.கார்த்தி,<br>8/1. காய்தே மில்லத் வீதி,<br>காந்திபுரம்,<br>குளேஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி, | ரூ.6500/- |

மேற்கண்டவாறு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கௌதம் என்பவர் கடந்தாண்டு வாடகைத்தொகை ரூ.5610/- விட கூடுதலாகவும் திரு.கார்த்தி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.6500/- விட கூடுதலாகவும் மாத வாடகைத்தொகை ரூ.7000/-க்கு சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1131/2020/அ6

**3000)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண்.8, 01.04.2020 முதல் காலியாக உள்ளது. இதற்கு முன்பு இதற்கான வாடகை ரூ.29,770/- ஆகும்.

மேற்படி வாடகை அதிகமாக உள்ளதால் வாடகைதாரர் தொகையினை செலுத்தாததால் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டு சுமார் 4 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இறுதியாக 13.08.2021 அன்று கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர்/முகவரி | மாதவாடகை ரூ |
|---|---|---|
| 1) | திரு.R.இளையராஜா, | ரூ.22,500/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | த/பெ.ரங்கசாமி,<br>20/9.குப்பு சாமி வீதி,<br>பொள்ளாச்சி. | | |
| | | 2) | திரு.சதீஸ்,<br>24.ராமகிருஷ்ணபுரம் வீதி,<br>பொள்ளாச்சி. | ரூ.20,500/- | |
| | மேற்கண்டவாறு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.R.இளையராஜா என்பவரின் உயர்ந்தபட்ச தொகை ரூ.22,500/-க்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1131/2020/அ6 | | | | |